**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப.,**

செ.மு.ஆ.அ3/2063/2019 நாள்: 27.04.2024.

பொருள்: **பொதுப்பணி** – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட கலையரசி (திருமதி).கு, என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

படிக்க:
01. வேலூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் எண்.ந.க.அ5/21832/2016 நாள்:25.01.2018
02. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ–1) துறை நாள்:08.03.2023.
03. மனித வள மேலாண்மைத் (G2) துறையின் கடித எண்.5532/G2/2023–1 நாள்:20.09.2023.
04. கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ஆ.கு.3/4600/2024 நாள்:20.02.2024

******

**ஆணை:–**

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் (தற்போது திருப்பத்தூர் மாவட்டம்), இருணாப்பட்டு கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்து பணியிடையே 23.01.2016 அன்று காலஞ்சென்ற **லேட்.சி.குணசேகரன்** என்பவரின் மகள் **திருமதி.கு.கலையரசி** என்பவருக்கு பார்வை 1–ல் கண்டுள்ள வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் **இளநிலை வருவாய் ஆய்வாளராக** பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தனியர் 05.02.2018 **முற்பகல்** நாட்றம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து தற்போது திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை 2–இல் கண்டுள்ள அரசாணை மற்றும் பார்வை 3(ம) 4–இல் கண்டுள்ள கடிதங்களில் காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கிய பணி நியமன அலுவலரால் பணிவரன்முறை

செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து **திருமதி.கு.கலையரசி** என்பவர் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் சேர்ந்த நாளான 05.02.2018 முப முதல் தமிழ்நாடு அமைச்சு பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தனியருக்கு தகுதிகாண் பருவம் துவக்கியும், மேலும் தனியரது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

3) சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/-க.தர்ப்பகராஜ்.
மாவட்ட ஆட்சியர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

//உத்தரவுப்படி//

ப. 27/04/2024 (1/4)

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
திருப்பத்தூர்.

பெறுநர்.
சம்மந்தப்பட்ட நபர்.

27/4/24

நகல் : "அ3" இருக்கைக்கு.